# அக்டோபர் – 30 – பொதுக்காலம்30ம் திங்கள்

## கடவுளைப் புகழ்ந்து பாடி அவரர் பெயரை போற்றுங்கள்: திபா. 68:4

### முதல் வாசகம் : உரோமையர் 8 : 12 - 17

சகோதர சகோதரிகளே! ஊனியல்புக்கு ஏற்ப வாழ்வோர் கடவுளுக்கு உகந்தவர்களாய் இருக்க முடியாது.ஆனால் கடவுளின் ஆவி உங்களுக்குள் குடிகொண்டிருந்தால், நீங்கள் ஊனியல்பைக் கொண்டிராமல், ஆவிக்குரிய இயல்பைக் கொண்டிருப்பீர்கள். கிறிஸ்துவின் ஆவியைக் கொண்டிராதோர் அவருக்கு உரியோர் அல்ல.பாவத்தின் விளைவாக உங்கள் உடல் செத்ததாயினும், கிறிஸ்து உங்களுள் இருந்தால், நீங்கள் கடவுளுக்கு ஏற்புடையவர்கள் ஆக்கப்படுவீர்கள் அதன் பயனாகத் தூய ஆவி உங்களுக்குள் உயிராய் இருக்கும்.மேலும், இறந்த இயேசுவை உயிர்த்தெழச் செய்தவரின் ஆவி உங்களுள் குடிகொண்டிருந்தால், கிறிஸ்துவை உயிர்த்தெழச் செய்த அவரே உங்களுள் குடிகொண்டிருக்கும் தம் ஆவியினாலே சாவுக்குரிய உங்கள் உடல்களையும் உயிர் பெறச் செய்வார்.ஆகையால் சகோதர சகோதரிகளே, நாம் ஊனியல்புக்குக் கடமைப்பட்டிருக்கவில்லை. அவ்வியல்பின்படி வாழவேண்டியதில்லை.நீங்கள் ஊனியல்புக்கு ஏற்ப வாழ்ந்தால், சாகத்தான் போகிறீர்கள் ஆனால், தூய ஆவியின் துணையால், உடலின் தீச்செயல்களைச் சாகடித்தால், நீங்கள் வாழ்வீர்கள்.கடவுளின் ஆவியால் இயக்கப்படுகிறவர்களே கடவுளின் மக்கள்.மீண்டும் அச்சத்திற்கு உள்ளாக்கும் மனப்பான்மையை நீங்கள் பெற்றுக்கொள்ளவில்லை மாறாகக் கடவுளின் பிள்ளைகளுக்குரிய மனப்பான்மையையே பெற்றுக் கொண்டீர்கள். அதனால் நாம், ”அப்பா, தந்தையே” என அழைக்கிறோம்.நாம் இவ்வாறு அழைக்கும்போது நம் உள்ளத்தோடு சேர்ந்து தூய ஆவியாரும் நாம் கடவுளின் பிள்ளைகள் என்பதற்குச் சான்று பகர்கிறார்.நாம் பிள்ளைகளாயின், உரிமைப் பேறு உடையவர்களாய் இருக்கிறோம். ஆம், நாம் கடவுளிடமிருந்து உரிமைப் பேறு பெறுபவர்கள், கிறிஸ்துவின் பங்காளிகள். அவருடைய துன்பங்களில் நாம் பங்குபெறவேண்டும் அப்போதுதான் அவரோடு மாட்சியிலும் பங்குபெறுவோம்.

**பதில்பாடல் :** ஆண்டவராம் நம் இறைவனே மீட்பளிக்கும் கடவுள்

### நற்செய்தி : லூக்கா 13 : 10 - 17

அக்காலத்தில், ஓய்வுநாளில் இயேசு தொழுகைக்கூடம் ஒன்றில் கற்பித்துக்கொண்டிருந்தார்.பதினெட்டு ஆண்டுகளாகத் தீய ஆவி பிடித்து உடல்நலம் குன்றிய பெண் ஒருவர் அங்கு இருந்தார். அவர் சிறிதும் நிமிர முடியாதவாறு கூன் விழுந்த நிலையில் இருந்தார்.இயேசு அவரைக் கண்டு அருகே கூப்பிட்டு, ”அம்மா, உமது நோயிலிருந்து நீர் விடுவிக்கப்பட்டுள்ளீர்” என்று கூறி,தம் கைகளை அவர் மீது வைத்தார். உடனே அவர் நிமிர்ந்து கடவுளைப் போற்றிப் புகழ்ந்தார்.இயேசு ஓய்வுநாளில் குணமாக்கியதைக் கண்ட தொழுகைக்கூடத் தலைவர் கோபம் கொண்டு, மக்கள் கூட்டத்தினரைப் பார்த்து, ”வேலை செய்ய ஆறு நாள்கள் உண்டே் அந்நாள்களில் வந்து குணம் பெற்றுக்கொள்ளுங்கள் ஓய்வுநாளில் வேண்டாம்” என்றார்.ஆண்டவரோ அவரைப் பார்த்து, ”வெளிவேடக்காரரே, நீங்கள் ஒவ்வொருவரும் ஓய்வுநாளில் தம் மாட்டையோ கழுதையையோ தொழுவத்திலிருந்து அவிழ்த்துக் கொண்டு போய்த் தண்ணீர் காட்டுவதில்லையோ?பாருங்கள், ஆபிரகாமின் மகளாகிய இவரைப் பதினெட்டு ஆண்டுகளாகச் சாத்தான் கட்டி வைத்திருந்தான். இந்தக் கட்டிலிருந்து இவரை ஓய்வுநாளில் விடுவிப்பது முறையில்லையா?” என்று கேட்டார்.அவர் இவற்றைச் சொன்னபோது, அவரை எதிர்த்த அனைவரும் வெட்கப்பட்டனர். திரண்டிருந்த மக்கள் எல்லாரும் அவர் செய்த மாட்சிக்குரிய செயல்கள் அனைத்தையும் குறித்து மகிழ்ச்சி அடைந்தனர்.

**தியானம் :** இன்றைய தியான வாசகங்களானது தூய ஆவியானவரின் கனிகளாலும், கொடைகளாலும், நிரப்பட்ட நாங்கள் வாழும் வாழ்க்கை தூய்மையானதாயும். ஆவியானவரின் வழிநடத்தலுக்கு உட்பட்டதாயும் எமது வாழ்க்கை இருக்க வேண்டுமென்று கூறுகின்றது. அவ்வாறு வாழும்பொழுதுதான் எமது வாழ்வானதும் வெளிவேடமற்றதாகவும் காணப்படும் என்பதை தெளிவு படுத்துகின்றது. நாங்கள் அனைவரும் திருமுழுக்கு என்னும் அருட்சாதனத்தின மூலம் தூய ஆவியானவரின் கனிகளாலும் கொடைகளாலும் நிரப்பட்டு கிறிஸ்தவன், கிஸ்தவள் என்ற உரிமையையும் பெற்றுள்ளோம். ஆனால் எமக்கு அன்பு, மகிழிச்சி, அமைதி, பொறுமை, சாந்தம்.........இவ்வாறாக அவர் எமக்குக் கொடுத்து கனிகளை ஏற்றுக்கொண்டு அதன்படி வாழ்ந்துள்ளோமா? கேள்விக்குறியே. மாறாக நாங்கள் வாழ்வது மாறுறுபட்ட வாழ்க்கையே. உலகிலே தலைசிறந்தது அன்பு ஒன்றே. இவ்வன்பு எம்மத்தியில் தேடினாலும் கிடைக்காததொன்றாகும். அன்பு பொறுமையுள்ளது, பரிவுள்ளது, தன்னலத்தை நாடாது, இறுமாப்பு அடையாது..........இவ்வாறு வேதாகமத்தில் பார்க்கின்றோம். இவ்வாறு வாழும் பொழுதுதான் நாங்கள் வெளிவேடமற்றவர்காகவும், தூய்மையானவர்களாகவும் வாழ்வோம். இவ்வாறான வாழ்வானது எமது குடும்பத்தில், அயலவர்களில், நண்பர்கள், இவ்வாறாக பரந்து காணப்பட வேண்டும் அப்போதுதான் இறைமகன் 18 ஆ்ண்டுகளாக தீய ஆவி பிடித்து நோய்வாய்பட்டிருந்த நோயாளியை குணப்படுத்தினாரோ! அதேபோன்று நாங்களும் அவரது வல்லமையால் அற்புதங்களையும், அதிசயங்களையும் செய்ய அவர் எம்மைத் தெரிந்தெடுத்து வழிநடத்த வரம்வேண்டுவோம்.